செ.வெ.எண்: 31 நாள்: 21.03.2017

# அரியலூர் மாவட்டத்தில் தாய் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் ஆய்வு.

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சித்துறையின் சார்பில் **தாய் திட்டத்தின்** மூலம் மேற்கொள்ளப்படவுள்ள பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் இன்று (21.03.2017) நேரில் ஆய்வு செய்தார்.

**இவ்வாய்வின்போது, மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததாவது :-**

அரியலூர் மாவட்டம், அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சித்துறையின் சார்பில் **தாய் திட்டத்தின்** மூலம் தேளூர் ஊராட்சியில் பெரிய ஏரி, நாகமங்கலம் ஊராட்சியில் கனகராயபிள்ளை ஏரி, இடையத்தாங்குடி ஊராட்சியில் நான்கொண்டான் ஏரி ஆகிய ஏரிகள் 2016-17ஆம் ஆண்டிற்கு தாய் திட்டத்தின் மூலம் தூர் வாரவும், கரைகளை பலப்படுத்தவும் நீர் பிடிப்புப்பகுதியை ஆழப்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. மேலும், பொதுமக்களுக்கு பயன் பெறும் வகையில் உள்ள ஏரி, குளங்களை தூர்வாரப்படும் என **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள்** தெரிவித்துள்ளார்.

முன்னதாக, ரெட்டிபாளையம் ஊராட்சி, மயிலாண்டகோட்டை கிராமத்தில் பழுதடைந்த ஆழ்துளாய் கிணற்றினை ஆய்வு மேற்கொண்டு, குடிநீர் பிரச்சனைக்கு நிரந்தர தீர்வு காண மாற்று ஆழ்துளாய் கிணறு அமைத்திட உரிய அலுவலர்களுக்கு **மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள்** உத்தரவிட்டார்.

இவ்வாய்வின்போது, திட்ட இயக்குநர் ஊரக வளர்ச்சி முகமை திட்டம் திருமதி.லோகேஸ்வரி, உதவி செயற்பொறியாளர் திரு.அருள்மொழி மற்றும் ஒன்றியப்பொறியாளர்கள் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு :- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**